வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 04.05.2024 சனிக்கிழமை | இதழ் : 125 | பக்கங்கள் : 12




# திட்டங்களை தடையின்றி தொடர்ந்தால் நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்படாது!

## இலங்கை அரசுக்கு அறிவுரை வழங்கினார் அமெரிக்க திறைசேரியின் உதவி செயலர்



ஜோர்ஜியா, மே 04

பொருளாதார மறுசீரமைப்புக்காக இலங்கை தற்போது முன்னெடுத்துள்ள செயல்திட்டங்களை தடையின்றி முன்னெடுத்தால் எதிர்காலத்தில் நெருக்கடியான நிலை தோற்றம் பெறாது என்றும் மறுசீரமைப்புக்களால் இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது எனவும் அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவிச் செயலாளர் றொபட் கப்றோன், நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவிடம் சுட்டிக்காட்டியுள்ளார். 11

## சர்வதேசத்தின் உத்தரவாதத்தை எதிர்பார்த்திருக்கும் ஜனாதிபதி!

கொழும்பு, மே. 14

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டது என்ற உத்தரவாதத்தை சர்வதேசம் வழங்கிய பின்னரே, ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை அதிகார பூர்வமாக அறிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என அறியமுடிகின்றது.

ஜூன் நடுப்பகுதியில் வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கை மீண்டு விட்டது என்ற அறிவிப்பு வெளிவரவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அதுவரை நலன்புரித் திட்டங்களை முன்னெடுப்பதெனவும், முன்கூட்டியே தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை விடுத்தால் அது நலன்புரித் திட்டங்களை பகிரும் விடயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார் என 11

## ஊடக சுதந்திரத்தில் பின்தங்கிய இலங்கை!

கொழும்பு, மே. 04

2024 ஆம் ஆண்டுக்கான பத்திரிகை சுதந்திர குறிகாட்டியை, எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு வெளியிட்டுள்ளதுடன் அதில் இலங்கையானது 150 ஆவது இடத்தை பிடித்துள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டு இலங்கை 135 ஆவது இடத்தில் காணப்பட்டது.

இலங்கையில் பத்திரிகை சுதந்திர விடயங்கள் 2009 ஆம் ஆண்டுவரை நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்துடன் தொடர்பு 11

## எரிவாயு விலை குறைந்தது

கொழும்பு, மே 04

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சமையல் எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டன.

லிட்றோ எரிவாயு நிறுவனத்தின் அறிவிப்பின்படி,

12.5 கிலோ எரிவாயு 175 ரூபாய் குறைந்தது. இதன்படி புதிய விலையாக 3 ஆயிரத்து 940 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ எடை கொண்ட ரூ.70 குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை ஆயிரத்து 582 ரூபாயாகும்.

2.3 கிலோ எரிவாயு 32 ரூபாயால் குறைக்கப்பட்டு 740 ரூபாயாக விற்பனையாகவுள்ளது.

இதேபோன்று, லாஃப்ஸ் எரிவாயு நிறுவனமும் விலைகளை குறைத்துள்ளது.

12. 5 கிலோ எடையுள்ள எரிவாயுவின் விலை 11

## சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளில் குளறுபடி!

கொழும்பு, மே. 04

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான நுழைவு அட்டைகளில் பாரிய குளறுபடிகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அவர்கள் விண்ணப்பம் செய்யாத பாடங்களை குறிப்பிட்டு நுழைவு அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அநேகமான நுழைவு அட்டைகளில் பரீட்சார்த்தியின் மொழிமூலம் மாற்றம் செய்யப்பட்டு அச்சிடப்பட்டுள்ளதாக அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

பரீட்சை நுழைவு அட்டைகள் கணினி மயப்படுத்தப்படும்போது ஏற் பட்ட தவறு காரணமாக இவ்வாறு பரீட்சை நுழைவு அட்டைகளில் பல்வேறு குளறுபடிகள் பதிவாகியுள்ளதாக பரீட்சைகள் 11

### பல்கலை. மாணவர் போராட்டம் மீது

## பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் கொழும்பில் நேற்று பதற்ற நிலை!

கொழும்பு, மே 04

இலவசக் கல்வி, இலவச சுகாதாரத்தை விற்க அரசாங் கம் சதி செய்வதாக குற்றஞ்சாட்டி கொழும்பில் நேற்று பல்கலைக் கழக மாணவர்கள் பெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் களை கலைக்க பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அப்பகுதியில் 11



## ராஜபக்ஷக்கள், பெரமுனவுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 04

பொருளாதாரப் படுகொலையாளிகள் என்று உயர் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட ராஜபக்ஷக்களை முன்னிலைப்படுத்தியுள்ள சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை.- இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். 11

## பல்கலை நிர்வாக அதிகாரிகள் நேற்று முதல் வேலைநிறுத்தம்

கொழும்பு, மே. 04

பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் ஒன்றியம் அவர்களின் சம்பள முரண்பாடுகள் மற்றும் அரசாங்கத் தால் வாக்குறுதியளிக்கப்பட்ட கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான தீர்க்கப்படாத பிரச்னைகளை வலியுறுத்தி நேற்று முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் ஒன்றியத்தின் செயலாளர் க.ஞானபாஸ்கரன் 11

## சு.கவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவது குறித்து முடிவில்லை

### கூறுகின்றார் விஜயதாச ராஜபக்ஷ

கொழும்பு, மே. 04

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவது குறித்து தாம் இதுவரை எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சு.கவின் ஜனாதிபதி வேட்பாளராக விஜேதாச ராஜபக்ச களமிறக்கப்படுவார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மே முதலாம் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

கடந்த மே தினக் கூட்டங்களில் வாக்காளர்களை கவர்வதற்காக தலைவர்கள் முக்கிய அறிவிப்புகளை விடுக்கத் தவறவில்லை. எதிர்பார்க்கப்பட்டதுதான். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழக்கம்போல, நாட்டைக் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தியையும் ஜே. வி. பி. என்ற தேசிய மக்கள் சக்தியையும் தன்னோடு இணையுமாறு மீண்டும் அழைக்கவும் தவறவில்லை.

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தாங்களே வெற்றிபெறுவோம் என்று நம்பிக்கொண்டிருக்கின்ற இரு தலைவர்களையும் இவ்வாறு தன்னோடு சேர்ந்து நாட்டைக் கட்டியெழுப்ப வாருங்கள் என்று ரணில் அழைத்தமை எதற்காக என்பது தெரியவில்லை.

அதுவல்ல இன்று இங்கே நாம் சொல்லவருவது, மலையகத்தில் தமது பங்காளிக் கட்சிகளின் மே தின வைபவங்களில் கலந்துகொண்ட ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாஸவும் ஆளைஆள் போட்டிபோட்டுக்கொண்டு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரத்து எழுநூறு ரூபாயாக அதிகரிக்கும் அறிவிப்பை வெளியிட்டார். ஏற்கனவே, மே தினத்துக்கு முதல் நாளே, பெருந்தோட்ட தொழிலாளர்களின் தின சம்பளத்தை ஆயிரத்து எழுநூறு ரூபாயாக அதிகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுவிட்டே அங்கு சென்றிருந்த அவர், கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் பலத்த கரகோஷத்திற்கு மத்தியில் அதுபற்றிய அறிவிப்பை வெளியிட்டார். ஆனால், அவர் அந்த அறிவிப்பை வெளியிட்டு கொழும்பை வந்தடைவதற்கு முன்னதாகவே பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அவ்வாறு சம்பளம் வழங்கமுடியாது என்று அறிவித்துவிட்டது.

"பெருந்தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாய் வழங்குவது தொடர்பில் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், தம்மால் நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாயை வழங்க முடியாதென" பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளதுடன், பெருந்தோட்ட கம்பனிகளுடன் எவ்விதமான தொடர்பாடல்களையும் மேற்கொள்ளாமல் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.

ஆக, ரணில்கூட இதனை எதிர்பார்க்காமல் இருந்திருக்கமாட்டார். பெருந்தோட்டங்கள் பெரும்பாலும் தனியார் வசமே இருக்கின்றன. தனது தொழிலாளர்களுக்கு எவ்வளவு சம்பளத்தைக் கொடுக்கவேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிப்பதை அனுமதிக்க முடியாது என்பதுபோலவே எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதையும் அவர்களுடன் ஆலோசனை செய்யாமல் முடிவெடுப்பது சரியானதா என்பது தெரியவில்லை.

ரணில் இவ்வாறு செய்தது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. அவர் எப்போதுமே இப்படி பல அறிவிப்புகளை விடுத்தவர்தான். ஆனால், எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவோ தனது பங்காளிக் கட்சியான பழனி திகாம்பரத்தின் தொழிற்சங்க மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய போது, சம்பளத்தை அதிகரிப்பதற்கு பதிலாக தோட்டத் தொழிலாளர்களை தோட்ட முதலாளிகள் ஆக்குவேன் என்று அறிவித்துவிட்டு திரும்பியிருக்கின்றார்.

அவர் லண்டனில் பிரபல பல்கலைக்கழகமான "லண்டன் ஸ்கூல் ஒவ் எக்கொணமிக்ஸ்"சில் படித்தவர். அதற்காக அவர் கஷ்டப்பட்டு படித்தவர் என்பதல்ல, அந்தப் பல்கலைக்கழகத்தில் நாட்டுத் தலைவர்களின் பிள்ளைகளுக்கான "கோட்டா"வில் அனுமதி பெற்று படித்தவர். சந்திரிகா, பிரான்ஸின் சோபோன் பல்கலைக்கழகத்தில் படித்ததுபோல.

அவர் தனியார்வசம் இருக்கும் இந்த பெருந்தோட்டங்களை அரசுடமையாக்கி, தொழிலாளர்களுக்கு பிரித்துக்கொடுக்கப் போகின்றாரோ என்னவோ?

மலையகத்தில்தான் இந்த இரண்டு தலைவர்களும் ஆள்ஆளுக்கு ஏட்டிக்குப் போட்டியாக அறிவிப்புகளை விட்டனர் என்றால், கொழும்பில் தமது உரையில் சஜித் மாத்திரமே, ஆகக் குறைந்தது பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்ற தனது அறிவிப்பையாவது வெளியிட்டார். ரணிலோ அல்லது அநுரகுமார திஸநாயக்கவோ மறந்தும் கூட அப்படியொரு பிரச்னை இருப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை. சில வேளைகளில் ராஜபக்ஷக்களின் துணையுடன் தேர்தலை சந்திக்க முடிவெடுத்திருப்பதால் ரணில் அதனைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், அநுரகுமாரவும் "தமிழ் மக்கள் தமது பிரச்னைக்கு தீர்வாக இந்த மாகாண சபைகளை நம்பினால் அது இருக்கத்தான் வேண்டும்" என்ற தனது அறிவிப்பைக்கூட அந்த சிங்கள மக்கள் திரள்களிடையே அறிவிக்க விரும்பவில்லையோ தெரியவில்லை.

சஜித் பிரேமதாஸ, பதின்மூன்றை அமுல்படுத்துவேன் என்று இப்போதுதான் அறிவித்தார் என்பதல்ல, அவர் கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் இதே போல அறிவித்தவர்தான். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாத்திரம் அவர் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளையும் பெற்றிருந்தார்.

ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகள் அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் பதின்மூன்றை அமுல்படுத்தச் சொல்லி அரசாங்கத்தை வலியுறுத்தியதாக எங்கும் நாம் செய்திகளை பார்த்ததில்லை. அதிகம் ஏன்? பொலிஸ் அதிகாரங்களை தவிர்த்து மற்றைய அதிகாரங்களை வழங்கத் தயாராக இருக்கின்றேன் என்று ரணில் பாராளுமன்றத்தில் அறிவித்தபோதுகூட அவர் எதற்காக பொலிஸ் அதிகாரத்தை வழங்கக்கூடாது என்று கேள்வி கேட்கவில்லை.

ரணில் வழக்கம்போல அதைச் செய்வேன் - இதைச்செய்வேன் என்று கூறிக்கொண்டிருக்க, இவர் தான் பதவிக்கு வந்தால் செய்வேன் என்கிறார். இவர்தான், அதிகாரத்துக்கு வந்தால் செய்வேன் என்கிறார். ஆனால், ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிகாரத்தில் இருப்பவர். இப்போது செய்யாததை மீண்டும் ஆட்சிக்கு வந்தால் செய்வேன் - என்கிறார்.

தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்க இனி யார் வந்தாலும் இதுவரை என்ன செய்தோம் என்பதை பட்டியலிட்டு விட்டு வரவேண்டும் என்பதையாவது சொல்லிவைப்போம்.

- [illegible]

*1700 ரூபாய் சம்பள அதிகரிப்பு*

# "அரசின் தீர்மானங்களை கம்பனிகள் மீறமுடியாது"

கொழும்பு, மே 04

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் அரசாங்கத்தின் தீர்மானங்களை பெருந்தோட்டக் கம்பனிகள் மீறி நடக்க முடியாது.- இவ்வாறு இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கச் செயலாளரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.



பிரச்னையை பேசித் தீர்மானிப்பதாக கம்பனிகள் கூறுகின்ற போதிலும் அவ்வாறு அந்தக் கம்பனிகள் செயல்படவில்லை என்றும் அவர் கூறினார்.

டொலர் பெறுமதி அதிகரிப்பால் பெருமளவில் இலாபமீட்டிய பெருந்தோட்ட கம்பனிகள் தங்களது ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்காமல் இழுத்தடிப்புச் செய்வதையிட்டு கம்பனிகள் வெட்கித் தலைகுனிய வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பல சுற்றுகளாக இடம்பெற்ற பேச்சுக்களின் பின்னர் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆனால், இது தொடர்பில் சம்பள நிர்ணய சபையில் இடம்பெற்ற பேச்சுக்களில் பங்கெடுப்பதை முதலாளிமார் சம்மேளனம் தொடர்ச்சியாகப் புறக்கணித்து வந்தது. இது சம்பள விவகாரத்தில் தொழிலாளர்களை ஏமாற்றும் முயற்சியாகவே எமக்குத் தெரிகிறது.

அதனால் தொழில் ஆணையாளரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டபூர்வமாக 1700 ரூபாய் சம்பள அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. 1000 ரூபாய் சம்பள அதிகரிப்பு கோரிய போதும் முதலாளிமார் சம்மேளனம் இதுபோன்ற இழுத்தடிப்புக்களையே செய்திருந்தது.- என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (எ)

# முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது

தெஹிவளை, மே 04

திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட கொஸ்கொட தாரகவின் மனைவியும், முன்னாள் பெண் பொலிஸ் கான்ஸ்டபிளும் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளை பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட "கொஸ்கொட தாரக" எனப்படும் குற்றவாளியான தர்மகீர்த்தி தாரக பெரேராவின் தல்கஸ்கேன பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது மனைவியிடமிருந்து 5 கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்தோடு, 30 வயதுடைய ஓய்வு பெற்ற பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் கைது செய்யப்பட்டதோடு இவரிடமிருந்து 5 கிராம் 200 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ)

# வீதியில் திடீரென தீ பிடித்த ஓட்டோ

நானுஓயா, மே 04

நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாக ஓட்டோ ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்தது.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

நோட்டன் பிரிட்ஜ் பகுதியிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே ஓட்டோ தீ பிடித்து எரிந்தது.

வீதியோரத்தில் நிறுத்தி விட்டு அருகிலுள்ள வர்த்தக நிலையத்துக்கு சென்று உணவு பொருட்கள் கொள்வனவு செய்து கொண்டு வந்து மீண்டும் ஓட்டோவை இயக்க முற்பட்ட போதே திடீரென தீ பரவல் ஏற்பட்டது.



தீப் பிடித்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் இயந்திரப் பகுதியில் பெற்றோல் கசிவு ஏற்பட்டு தீப் பிடித்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# இரு பஸ்கள் மோதி விபத்து: 23 பேர் மருத்துவமனையில்

அம்பாறை, மே 04

இ. போ. ச. பேருந்தும் பாடசாலை சேவை பேருந்தும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் 23 பேர் காயமடைந்ததாக அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து அம்பாறை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் பாடசாலை மாணவர் [illegible]வதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

# ஆலயங்களில் திருட்டு

காத்தான்குடி, மே 04

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி மஞ்சம்தொடுவாய் பிரதேசத்திலுள்ள இரு ஆலயங்களில் செம்பிலான குத்துவிளக்குகள் மற்றும் மின்சார சபையின் மின்பிறப்பாக்கியிலுள்ள செப்புக்கம்பிகளைத் திருடிவந்த 26 வயதுடைய இரு இளைஞர்களை வியாழக்கிழமை இரவு கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

டச் பார் வீதியிலுள்ள சிந்தாமணி பிள்ளையார் ஆலயம் மற்றும் மஞ்சம்தொடுவாயிலுள்ள வீரபத்திரர் ஆலயங்களில் திருட்டுப்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 04.05.2024 சனிக்கிழமை ඊළනාඩු
குரோதி வருடம், சித்திரை 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணில் பொது வேட்பாளராக முடியுமா?

ரணில் விக்கிரமசிங்க ஒரு பொது வேட்பாளராக களமிறங்கவுள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன. இலங்கைக்கான பொது வேட்பாளர் என்பதன் பொருள், அவர் சகல இன மக்களின் ஆதரவுடனும் போட்டியிடுகின்றார் என்பதாகும். அவ்வாறாயின் அவர், சிங்கள மக்கள் தவிர்ந்த ஏனைய மக்களின் அபிலாஷைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே பொருளாகும்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவோ அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டுவருபவர். 13ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு அல்ல - ஆனால் அதனை உச்சபட்சமாக பயன்படுத்தும் உரிமை தமிழ் மக்களுக்குண்டு ஏனெனில், அது தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையின் பெயராலேயே இலங்கை அரசியல் யாப்பின் அங்கமானது. ஆனால், அரசமைப்பை அமுல்படுத்துவது தொடர்பில் கூட, கரிசனையை காண்பிக்காத ஒருவர் எவ்வாறு பொது வேட்பாளராக வரமுடியும் என்னும் கேள்வியுண்டு.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் உரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. தமிழ் பொது வேட்பாளர் என்னும் நிலைப்பாடு, ரணில் விக்கிரமசிங்கவின் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுடன் நேரடியாக மோதும். தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படும்போது, ரணில் விக்கிரமசிங்க தன்னையொரு பொது வேட்பாளராக அறிவிப்பது முரண்பாடான ஒன்றாகவே நோக்கப்படும். அவர் அவ்வாறு அறிவித்தாலும் கூட, தமிழ் மக்களின் ஆதரவின்றியே அவர் பொது வேட்பாளராக நிற்கவேண்டிவரும்.

தமிழ் பொது வேட்பாளர் என்னும் நிலைப்பாடு, தமிழ் மக்கள் ஒரு புதிய அரசியல் பிரவேசத்தை முன்னெடுப்பதற்கான முதல் படியாகும். இலங்கைக்கான பொருளாதார மீட்சியை இலக்கு வைக்கும் போது, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை தமிழ் பொது வேட்பாளர் முன்வைப்பார். பொருளாதார மீட்சி என்னும் பெயரில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நீர்த்துப் போகச் செய்யும் உக்தியை தோற்கடிக்க வேண்டுமாயின், அதனை தமிழ் பொது வேட்பாளர் என்னும் எதிர் போட்டியின் மூலமே எதிர்கொள்ள முடியும்.

தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கருவானது, ஒரே நேரத்தில் இலங்கையின் தேர்தல் முறைமையின் ஊடாக, தமிழ் மக்களின் பிரச்னையை முன்வைக்கின்றது - அதேவேளை, தென்னிலங்கை வேட்பாளரின் அரசியல் நிலைப்பாடுகளையும் தோற்கடிக்கின்றது. இந்த வாய்ப்பை பகிஷ்கரிப்பு ஒரு போதுமே வழங்காது. பகிஷ்கரிப்பானது, அடிப்படையில், மறைமுகமாக ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கே உதவி செய்கின்றது. அவரின் பெரும்பான்மைக்குப் பலம் சேர்க்கின்றது.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படும்போது, இலங்கைத் தீவில் எவருமே தங்களை ஒரு பொது வேட்பாளராக அறிவிக்க முடியாது. அவ்வாறு அறிவிக்கும் போது, தமிழ் மக்களின் ஆதரவின்றியே அவர் பொது வேட்பாளராக நிற்கின்றார் என்பது வெள்ளிடைமலையாகும். ஏன் தமிழ் மக்கள் தனியாகப் போட்டியிடுகின்றனர் - ஏனெனில் ஏனைய சமூகங்கள் எவையுமே அவ்வாறு நிற்காத போது, தமிழ் மக்கள் மட்டும் ஏன் இவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொண்டனர்? இந்தக் கேள்விக்கான பதிலை தேடும் போது, தேசிய இனப் பிரச்னை தனியாகத் தெரியும்.

# இன்று மணிவிழாக்காணும் யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்

**வீரகத்தி தனபாலசிங்கம்**



சிலரைப் பதவிகள் பெருமைப்படுத்துகின்றன. வேறு சிலர் பத விகளைப் பெருமைப்படுத்துகிறார்கள். இதில் நிச்சயமாக இரண்டாவது வகையான ஆளுமையாகவே நான் வைத்தியக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனைப் பார்க்கிறேன்.

மிகவும் இளம் வயதில் இலங்கை சுகாதாரத் துறையில் பல உயர்பதவிகளை வகித்து அளப்பரிய சேவையைச் செய்துவரும் அவர் இன்று தனது 60 வது அகவையில் பிரவேசிக்கிறார்.

வடமராட்சியின் கரவெட்டி காலங்காலமாக பல்வேறு துறைகளிலும் தலைசிறந்த ஆளுமைகளைத் தோற்றுவித்த பாரம்பரியத்தைக் கொண்ட மண். தமிழ் மண்ணில் முதன் முதலான கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையா, தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் எம். சிவசிதம்பரம் தொடக்கம் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்று இந்த ஆளுமைகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகும். அதை விபரிக்க இங்கும் இடம் போதாது.

மணிவிழாக்காணும் கேதீஸ்வரன் இன்றைய காலகட்டத்தில் கரவெட்டியை அடையாளப்படுத்தும் பெருமைக்குரிய ஆளுமைகளில் ஒருவராக விளங்குவது எம்மெல்லோருக்கும் பேருவகை.

சோவியத் ரஷ்யாவில் தனது மருத்துவக் கல்வியைப் பெற்ற கேதீஸ்வரன் சமுதாய மருத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெறுக் கொண்டார்.

தனது 25 வது வயதில் கேதீஸ்வரன் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரியாக முதல் நியமனத்தைப் பெற்றார்.

அதற்கு பிறகு வவுனியா பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரி, வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிகளை வகித்து தற்போது யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சேவையாற்றி வருகிறார்.

சுகாதார சேவையில் இளவயதில் இருந்தே முக்கியமான பதவிகளை வகித்து வளமான அனுபவத்தைக் கொண்டிருக்கும் கேதீஸ்வரன் இன்று இலங்கையில் உள்ள முக்கியமான சுகாதார சேவை அதிகாரிகளில் ஒருவராக விளங்குகிறார்.

தனது நிருவாகத்தின் கீழ் இருக்கும் பிராந்தியங்களின் சுகாதார சேவைகளின் சிறப்புக்காக அரசாங்கத்தின் கௌரவத்தையும் அவர் பல தடவைகள் பெற்றிருக்கிறார்.

கேதீஸ்வரனின் எளிமையும் நயநாகரிகமான அணுகுமுறையும் மக்களுடனான தொடர்பாடல்களில் அவரின் கண்ணியமான நடத்தையுமே அவரை இன்றைய உயர்ந்த நிலைக்கு கொண்டுவந்தன என்பதில் சந்தேகமில்லை.

கேதீஸ்வரன் அதிர்ந்து பேசியதை எவரும் கண்டிருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. சுகாதாரசேவை அதிகாரிகளுக்கு மாத்திர மல்ல சகல துறைகளையும் சேர்ந்த உயரதிகாரிகளுக்கும் இருக்கவேண்டிய சகல உயர் பண்புகளையும் உருவகப்படுத்தும் சிறந்த ஓர் ஆளுமையாக எம்மத்தியில் அவர் பிரகாசிக்கிறார்.

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் கேதீஸ்வரன் செய்துவந்திருக்கும் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவைகளை நான் அறிவேன். வவுனியாவில் அவர் பல வருடங்கள் சேவைசெய்து அந்த பிராந்திய மக்களினதும் பிரதிநிதிகளினதும் பெரு மதிப்புக்குரியவராக திகழ்ந்த மாண்பை காலஞ்சென்ற மூத்த பத்திரிகையாளரான எனது நெருங்கிய வவுனியா பொன்னையா மாணிக்கவாசகம் என்னிடம் தடவைகள் கூறியிருக்கிறார்.

கேதீஸ்வரின் நிருவாகத்தின் கீழ் அண்மைக் காலமாக யாழ்ப்பாணம் சுகாதாரசேவையில் முன்னெடுக்கப்படுகின்ற மேம்பாட்டு நடவடிக்கைகள் அவருடைய நிருவாகத் திறமைக்குச் சான்று பகர்கின்றன.

கரவெட்டி ஆதார வைத்தியசாலையை இன்று பல்வேறு வசதிகளையும் கொண்டதாக மேம்படுத்தியதில் கேதீஸ்வரன் செய்த பங்களிப்பு அவரின் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவையை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு எமக்கு நெருக்கமாக முன்னால் உள்ள ஒரு சான்று மாத்திரமே.

கேதீஸ்வரனின் மணிவிழாவைக் கொண்டாடுவதற்கு கரவை மக்களும் புலம்பெயர்ந்த உறவுகளும் இன்று விமரிசையான விழாவொன்றை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இன்று காலை நெல்லியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் முன்னாள் அதிபர் நடராஜா தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும் விழாவில் மருத்துவத்துறை மற்றும் கல்வித்துறை உட்பட பல்வேறு துறைகளையும் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு கேதீஸ்வரனை சொந்த கரவை மக்கள் முன்னிலையில் கௌரவிக்கிறார்கள் என்பது அளவிலா மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது.

அவரின் சேவைகளையும் சாதனைகளையும் விளக்கும் "ஆற்றலாளன்" என்று மகுடத்திலான மணிவிழா மலர் ஒன்று இன்றைய விழாவில் வெளியிட்டு வைக்கப்படுகிறது. மணிவிழாவுக்கான விரிவான ஏற்பாடுகளை செய்வதில் பல வாரங்களாக முன்னின்று உழைத்த கரவை திரு இருதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இளையதம்பி இராகவனும் அவரைச் சார்ந்த குழுவினரும் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

கேதீஸ்வரன் ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ்ந்து குறிப்பாக இலங்கை சுகாதார சேவைக்கும் பொதுவில் மக்களுக்கும் தொடர்ந்து பயனுறுதியுடைய சேவையைத் திறம்படச்செய்ய கரவை மக்களுடன் சேர்ந்து வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய ராசிபலன்

வைகாசி - 04 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 21
நல்ல நேரம் : 07.30 - 08.30
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகாதசி

**மேடம்**
உங்களுடைய ஆலோசனை ஏற்கும்படி இருக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். சிறப்பான நாள்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
உங்கள் பிடிவாத போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். வியாபாரம் சூடுபிடிக்கும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை நடக்கும் நாள்.

**கன்னி**
எதிர்பாராத பணவரவு உண்டு. நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். உறவினர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை பெறுவீர்கள். கனவு நனவாகும்.

**விருட்சிகம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் ஆதர்வு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
மற்றவர்களை பற்றி வீண் விமர்சனங்களை தவீர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். வேலைச்சுமை அதிகரிக்கும். பேச்சியில் இங்கிதம் தேவைப்படும்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாக பழகுங்கள். மேலதிகாரிகளுடன் விவாதம்வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

# பல்கலையில் அரங்கேறிய சோமாயணம்

புதுச்சேரி, மே 04

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் அரங்கேறிய சோமாயணம் நாடக விவகாரம் தொடர்பாக அதன் இயக்குநர் பணி நீக்கம் செய்யப்பட்டார். இதனைக் கண்டித்து நாடகத் துறையை மூடி மாணவர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடக தினத்தை முன்னிட்டு 'சோமாயணம்' என்ற தலைப்பில் நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகத்தில் இராமாயண கதாபாத்திரங்களை அவமதிக்கும் வகையில் கதையும், கதாபாத்தி ரங்களும் சித்திரிக்கப்பட்டதாக எதிர்ப்பு கிளம்பியது.

இந்நிலையில் நாடகத்துறைத் தலைவர் வேலு சரவணன் பதவியிறக்கம் செய்யப்பட்டார்.




இந்த நாடகத்தின் இயக்குநரும், பட்டமேற்படிப்பு மாணவருமான புஷ்பராஜ் இடைநிறுத்தப்பட்டார்.

இதையடுத்து நாடகத்துறை மாணவர்கள் உள்ளிருப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர். பொலிஸார் அவர்களை போராட அனுமதிக்காமல் தடுத்ததால், வீதியில் அமர்ந்து போராட்டத்தை நடத்தினர்.(எ)

# வறட்சியால் கருகும் தென்னைகள் 10,000 ரூபாய் இழப்பீடு வழங்குக


## அன்புமணி கோரிக்கை

சென்னை, மே 04

வறட்சியால் கருகும் தென்னை மரங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு:

ஒரு மரத்துக்கு ஒரு நாளைக்கு குறைந்து 40 லீற்றர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒரு மரத்துக்கு ஒரு நாளைக்கு தண்ணீர் பாய்ச்ச 10 முதல் 13 ரூபாய் வரை செலவாகும். 1,000 தென்னை மரங்களை வைத்துள்ள விவசாயி, அவற்றுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஒரு மாதத்துக்கு 4. 5 இலட்சம் ரூபாய் முதல் 6 இலட்சம் ரூபாய் வரை செலவழிக்க வேண்டியிருக்கும். பெரும்பான்மையான விவசாயிகளுக்கு இது சாத்தியம் இல்லை. ஆயிரக்கணக்கில் செலவழித்தும் தென்னை மரங்களைக் காப்பாற்ற முடியாத நிலையில் விவசாயிகளின் துயரைத் துடைக்க தமிழக அரசு எந்த முன்னெடுப்பையும் மேற்



கொள்ளாதது கண்டிக்கத்தக்கது.

எனவே, விவசாயிகளின் துயரத்தை தற்காலிகமாக தீர்க்கும் வகையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ஒரு மரத்துக்கு 10,000 ரூபாய் வீதம் தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# தமிழக சட்ட சபை தேர்தலில் இளைஞர்களுக்கு வாய்ப்பு!

## பா. ஜ. க. கட்சி வியூகம் வகுப்பு

மதுரை, மே 04

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தலில் பா. ஜ. க. கட்சி சார்பில் அதிகளவில் இளைஞர்களை உள்ளீர்க்கத் திட்டமிட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் தமிழ்நாட்டில் முடிவடைந்துள்ளது. இந்த நிலையில், சட்ட சபை தேர்தலை எதிர்கொள்வது குறித்து பா. ஜ. க. திட்டங்களை வகுக்க ஆரம்பித்துள்ளது.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் புதுமுகங்கள் மற்றும் இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்று எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் - பிரபலங்களுக்கே வாய்ப்பு அளிக்கப்பட்டது.

எனினும், கட்சி அடிமட்டம் வரை வலுவாக இல்லை. பெருந்தொகை பணம் செலவு செய்தும் பா. ஜ. கவால் பெரும் வெற்றியை பெறுவது சாத்தியமற்றது என்று கருதப்படுகின்றது.

இந்த நிலையில், சட்டசபை தேர்தலுக்கான திட்டங்களை பா. ஜ. க. இப்போதே வகுக்க ஆரம்பித்துள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக கட்சியை அடிமட்டம் வரை வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# சீமானின் போராட்டத்துக்கு பொலிஸ் தடை

கடலூர், மே 04

வள்ளலார் சத்தியஞான சபையில் சர்வதேச மையம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து சீமான் அறிவித்த போராட்டத்துக்கு பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர்.

தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருக்கும் நேரத்தில் கட்சி சார்பில் போராட்டம் நடத்த அனுமதி இல்லை என்றுகூறியே நாம் தமிழர் கட்சியின் போராட்டத்துக்கு பொலிஸார் தடை விதித்தனர். (எ)

# "மோடியால் தலைகுனியும் இந்தியர்கள்"

சென்னை, மே 04

மலிவான, பொறுப்பற்ற அரசியல்வாதியை 10 ஆண்டு காலம் பிரதமராகப் பெற்றதற்கு ஒவ்வொரு இந்தியரும் தலைகுனிய வேண்டிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி அடிப்படை புரிதல் இல்லாமல் 10 ஆண்டு காலம் பிரதமராக இருந்த நரேந்திர மோடி பேசுவது மிகுந்த வியப்பை தருகிறது. அரசமைப்புச் சட்ட உறுப்பு 15 இன்படி எந்தவொரு குடிமகனையும் மதம், இனம், சாதி அடிப்படையில் வேறுபாடு காட்டக்கூடாது என்று கூறுகிறது. ஆனால், மத அடிப்படையில் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க காங்கிரஸ் முயற்சி செய்கிறது என்ற அபத்தமான வாதத்தை பிரதமர் மோடி தொடர்ந்து பேசி வருகிறார். அரசமைப்பு சட்டத்தின்படி இடஒதுக்கீடு மதத்தின் அடிப்படையில் வழங்க முடியாது.- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# யாழ். கோட்டையை சுற்றுலாவிகளின் தேவைக்கேற்ப மாற்றுமாறு பணிப்பு!

## வடக்கு ஆளுநர் விடுத்தார்



யாழ்ப்பாணம், மே 04

**யாழ்ப்பாணம் நகரின் முக்கிய சுற்றுலா தலமான கோட்டையை சுற்றுலா பயணிகளின் தேவைக்கு ஏற்றால்போல மாற்றியமைப்பதற்கான புதிய திட்டங்களை வகுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.**

ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்திலேயே அவர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

மேலும், கோட்டையின் உட்புற மற்றும் வெளிப்புற சூழலை, சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் அழகுபடுத்த தேவையான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவும் உத்தரவிடப்பட்டது.

யாழ். மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம் இணைந்து புதிய திட்டங்களை வடிவமைக்குமாறும் அதற்கான அனுமதியை மத்திய அமைச்சு மற்றும் துறைசார் திணைக்களங்களிடம் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவும் இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

வரலாற்று சின்னமாக காணப்படும் கோட்டையை பாதுகாப்பதற்கும் அதனூடாக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் ஏற்ற வகையில் புதிய திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும் என்றும் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய சுற்றுலா இடங்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராயுமாறும் ஆளுநர் கூறினார்.

(ஐ)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு நடமாடும் சேவை முல்லையில்



முல்லைத்தீவு, மே 04

புதுக்குடியிருப்பு பிரதேச சபை மைதானத்தில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை நேற்று ஆரம்பமானது.

"நானே ஆரம்பம் வெல்வோம் சிறீ லங்கா - ஸ்மார்ட் சூரன்களோடு" எனும் தொனிப் பொருளில் ஆரம்பமான இந்த நடமாடும் சேவை இன்று சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், வெளிநாடுகளில் பணிபுரிவோரின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், தொழில் வங்கியில் பதிவு செய்தல், உத்தேச தொழில் வாய்ப்புகள், சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல் போன்றவை முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், ருமேனியா, மத்திய கிழக்கு நாடுகள், இஸ்ரேல், ஐரோப்பா நாடுகளில் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வது தொடர்பாக முகவர் நிறுவனங்களால் தெளிவூட்டல்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், வட மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரன், பிரதேச செயலாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கிளிநொச்சியில் இருவர் கைது!

கிளிநொச்சி, மே 04

போதைப்பொருளுடன் இருவர் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பரந்தன் சந்திப் பகுதியில் வைத்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் போதை ஒழிப்புப் பிரிவினர் இவர்களை கைது செய்தனர்.

கைதான நபர்களிடமிருந்து 11 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவதற்காக கிளிநொச்சி பொலிஸாரிடம் சான்றுப் பொருட்களுடன் ஒப்படைக்கப்பட்டனர்.

(ஐ)

# அனுமதி பத்திரமின்றி மீன்பிடித்த இருவர் கைது

வடமராட்சி, மே 04

சுண்டிக்குளம் - சாலை கடல் பரப்பில் அனுமதிப்பத்திரம் இன்றி மீன்பிடித்த இருவர் படகுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்தது.

கடற்படை முகாம் அருகே நீண்டநேரம் சந்தேகத்துக்கு இடமான முறையில் தரித்து நின்ற படகை கடற்படையினர் சோதனையிட்டனர். இதன் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சோதனையில், பிடிபட்ட படகு அனுமதி பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்டமை தெரிய வந்தது.

கைதான இருவரும் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-02)

# அரச மருத்துவமனைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, மே 04

நாட்டின் அரச மருத்துவமனைகளில் கடுமையான மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு நிலவி வரும் தட்டுப்பாட்டால் நாடு முழுவதிலும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மருந்துப் பொருட்களுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக மக்கள் தனியார் மருந்தகங்களில் மருந்துகளை கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளது.

இதேநேரம், கொழும்பு தேசிய மருத்துவமனையில் பெரும் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நீடிக்கிறது.

இதேவேளை சுமார் 20 முதல் 30 வீதமான அளவில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் துசார ரணதேவ தெரிவித்துள்ளார்.

(ஐ)

# யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் சிறப்புற்ற கலை சங்கமம் - இசை, நடன விழா

யாழ்ப்பாணம், மே. 04

தமிழ்நாட்டில் புகழ் பெற்ற பிரிட்ஜ் அக்கடமியின் இலங்கை கிளை நடத்திய கலை சங்கமம் - இசை, நடன விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் சிறப்புற நடைபெற்றது.

ஏறத்தாழ 10 மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்ற இந்த ஆற்றுகை நிகழ்வில் யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு கண்டி, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து ஏராளமானவர்கள் வருகை தந்து பங்கேற்றனர். இசை, நடனம் என 17 ஆற்றுகைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழகத்தில் இருந்து பிரிட்ஜ் அக்கடமியின் நிறுவுநர் மற்றும் தலைவர் நரசிம்மன் ரகுராமன், இசைத்துறை தலைவர் முனைவர் என். சாரதா, பரதநாட்டியத் துறைத் தலைவர் முனைவர்






எஸ். சுமதி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதம விருந்தினர்களாக இந்தியத் துணைத்தூதர் சாய் முரளி, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், பதில் அரசஅதிபர் ம. பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். சிறப்பு விருந்தினர்களாக மூத்த சங்கீத வித்துவான் பொன். சிறீவாமதேவன், கலைஞர் வேல் ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் வலிகாம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சிறீதேவி கண்ணதாசன் யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் அகல்யா ராஜபாரதி தென்மராட்சி கல்வி வலய அதிபர் பா. உதலிங் கல்விப் பணிப்பாளர் விஜிதா சுனில் ஆரியரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொழும்பில் இருந்து 300 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் மட்டக்களப்பில் இருந்து 150 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர். ஆற்றுகைகள் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருந்தன. நேரக்கட்டுப்பாட்டுடன் அரங்காற்றுகை செய்யப்பட்டன. நிகழ்ச்சிகளை ஆரணி மற்றும் மொறாயஸ் ஆகிய பிரபல வானொலி அறிவிப்பாளர்கள் நேர்த்தியாக தொகுத்து வழங்கினர்.

பிரிட்ஜ் அக்கடமி எங்கள் மண்ணில் உள்ள சங்கீத சபை போன்ற ஓர் அமைப்பு. பதிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஊடாக அவர்களின் பாடத்திட்டத்தை அமுலாக்கி தர நிலைகளுக்கான பரீட்சைகளை நடத்துகின்றது. இதன் இலங்கை இணைப்பாளராக விளங்குபவர் துரைரட்ணம் சிறீ சுடரோன்.

நுண்கலைத் துறைசார்ந்து தமிழகப் பல்கலைக்ககழகங்களில் உயர் பட்டப்படிப்புகளுக்கான ஏற் பாடுகளையும் பிரிட்ஜ் அக்கட மியினர் மேற்கொண்டு வருகின் றனர். இதனால் தமிழகத்தின் பல பாகங்கள் தவிர, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், டுபாய் போன்ற இடங்களிலும் அதன் கிளைகள் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையாண்மை பத்திர பதிவர்களுடன் அரசாங்கம் விரைவில் பேச்சு நடத்தும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மே 04

**இறையாண்மை பத்திர பதிவுதாரர்களின் தற்காலிக குழுவின் பிரதிநிதிகளுடன் இலங்கை விரைவில் மற்றொரு சுற்று பேச்சு நடத்தும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**



லண்டனில் நடத்தப்படவுள்ள இந்த பேச்சுக்கான சரியான திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை - என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், "12 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான கடனை மறுசீரமைப்பதற்கான சர்வதேச பத்திரதாரர்களின் முன்மொழிவை இலங்கை கடந்த மாதம் நிராகரித்தது.

இது, முக்கியமான சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு மற்றும் இரண்டு வருட கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான அதன் முயற்சிகளை தாமதப்படுத்தும் என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிவாரணத்தை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை அரசாங்கம், பங்கு பத்திரகாரர்களின் முன்மொழிவுகளுக்கு இணங்கும் என்ற எதிர்பார்ப்பும் நிலவுகிறது.

முன்னதாக பங்குபத்திரகாரர்களின் முன்மொழிவுக்கும் இலங்கை அரசாங்கத்தின் முன்மொழிவுக்கும் இடையில் பெரும் வித்தியாசங்கள் இல்லையென்று இலங்கையின் முக்கிய பொருளாதார நிபுணர் ஒருவரும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது" என கூறியுள்ளார். (ஐ)

# கணவனின் கத்திக்குத்தில் மனைவி உயிரிழந்தார்!

கொழும்பு, மே 04

கணவனின் கத்திக்குத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த மனைவி உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் இரு பிள்ளைகளின் தாயான 26 வயது பெண்ணே உயிரிழந்தார்.

மொனராகலை, நக்கல பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அறிய வருவதாவது,

கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி குடும்ப தகராறால் சந்தேகநபர் மனைவியையும் மாமியாரையும் தாக்கினார். இதில், மாமியார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த சந்தேகநபரின் மனைவி பதுளை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சந்தேகநபர் ஏற்கனவே மொனராகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கலைஞர்களுக்கு கௌரவிப்பும் அடையாள அட்டை வழங்கலும்

அம்பாறை, மே. 04

அம்பாறை மாவட்டத்திலுள்ள கலைஞர்களை கௌரவித்து அவர்களுக்கான உதவித் தொகை மற்றும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு கௌரவ அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் கலந்து கொண்டார்.

கலைஞர்களுக்கான காசோலைகள் மற்றும் கலைஞர் அடையாள அட்டைகள் என்பன வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கஞ்சா பயிரிடப்பட்ட தோட்டம் மொனராகலையில் அழிப்பு

கொழும்பு, மே 04

கஞ்சா பயிர் செய்கை தோட்டம் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

மொனராகலை - வெல்லவாயவில் பயரிடப்பட்டிருந்த கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, 28 ஆயிரத்து 475 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. இவற்றின் பெறுமதி ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமானது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், அங்கிருந்து தப்பிச் சென்ற கஞ்சா செடியை பயிரிட்ட நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ)

# தங்கம் விலை குறைந்தது

கொழும்பு, மே 04

நாட்டில் தங்கத்தின் விலை நேற்று குறைவடைந்தது. ஒரு அவுன்ஸ் தங்கம் 6 இலட்சத்து 84 ஆயிரத்து 150 ரூபாயாகக் குறைவடைந்துள்ளது.

இதன்படி, 24 கரட் 1 கிராம் தங்கம் 24 ஆயிரத்து 140 ரூபாயாகவும் ஒரு பவுண் ஒரு இலட்சத்து 93 ஆயிரத்து 100 ரூபாயாகவும் குறைவடைந்தது.

இதேவேளை, 22 கரட் 1 கிராம் தங்கம் 22 ஆயிரத்து 130 ரூபாவாகவும், ஒரு பவுண் ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 50 ரூபாயாகவும் குறைவடைந்தது.

# 1,769 போலி நாணயத்தாள்கள் 2023இல் கைப்பற்றப்பட்டன!

கொழும்பு, மே 04

நாட்டில் 2023ஆம் ஆண்டில் 1,769 போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன என்று இலங்கை மத்திய வங்கியின் நிதி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், போலி நாணயத்தாள்கள் தொடர்பில் 11 நீதிமன்ற வழக்குகளுக்கு இலங்கை மத்திய வங்கி முகங்கொடுத்துள்ளது என்றும் கூறப்பட்டது.

நாட்டில் புழக்கத்திலுள்ள பல மில்லியன் நாணயத்தாள்களுள் 1.4 வீதமான போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

மேலும், புழக்கத்தில் காணப்படும் போலி நாணயத்தாள்களை கண்டுபிடிப்பது தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்கில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், நீதியை செயல்படுத்தும் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகளை இலங்கை மத்திய வங்கி ஏற்பாடு செய்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# பாதாள உலகக் குழுக்களை சேர்ந்த 12 பேர் கைதாகினர்!

கொழும்பு, மே 04

விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுவினர் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பாதாள உலக குழுக்களுடன் தொடர்புகளை பேணியவர்கள் என்று கூறப்படும் 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் அனைவரும் 30 - 35 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

கடந்த மாதம் 19 ஆம் திக்தி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இதுவரை பாதாள உலக குற்றக் குழுக்களை சேர்ந்த 804 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# "எனது கைது அநீதியானது" நடிகை தமிதா முறைப்பாடு

கொழும்பு, மே 04

அநீதியான முறையில் தன்னை கைது செய்ததன் மூலம் தனது உரிமைகள் மீறப்பட்டன என்று சிங்கள திரைப்பட நடிகை தமிதா அபேரத்ன இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

நிதி மோசடி குற்றச்சாட்டில் ஈடுபட்ட நடிகை தமிதாவும் அவரின் கணவரும் கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். தற்போது, பிணையில் இருவரும் விடுவிக்கப்பட்ட நிலையில் தமிதா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும், அந்த முறைப்பாட்டில் தான் ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக அரசியலுக்கு நுழைவதால் தன்மீது பொய் குற்றச்சாட்டு சுமத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# தந்தையின் ஆண் உறுப்பை வெட்டிய தனயன்

கொழும்பு, மே 04

தந்தையின் ஆண் உறுப்பை வெட்டிய மகனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கேகாலை - ரம்புக்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச சம்பவம் தொடர்பில் அறிய வருவதாவது,

காயப்பட்ட நபர் மனைவியுடன் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார். கடந்த 30ஆம் திகதி இரவு அவர் மது போதையில் தனது மனைவியை தாக்கியுள்ளார்.

அப்போது, அவர் கட்டியிருந்த சாரம் அவிழ்ந்துள்ளது. அந்தச் சமயத்தில் அவரின் மகன் தந்தையின் ஆணுறுப்பை வெடியுள்ளார்.

இதையடுத்து அவர், ரம்புக்கனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் கேகாலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அவரின் 28 வயது மகனை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# விஜயதாஸமீதான வழக்கு; தீர்ப்பு வரும் 7ஆம் திகதி!

கொழும்பு, மே 04

நீதி அமைச்சர் விஜதாஸ ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள மனு தொடர்பில் இடைக்கால தடை விதிப்பதா, இல்லையா என்ற தீர்ப்பை எதிர்வரும் 7ஆம் திகதி வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக செயல்படுவதற்கு இடைக்கால தடை விதித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி, நீதி அமைச்சர் விஜயதாஸவால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

அத்துடன், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுப்பது தொடர்பாகவும் அன்றைய தினம் தீர்மானிக்கப்படுமென மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி. என். சமரகோன் உத்தரவிட்டார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக விஜயதாஸ கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி கட்சியின் நிறைவேற்றுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டார்.

இதற்கு எதிராக கட்சியின் உறுப்பினர்கள் சிலரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, அவர் பதவியில் செயல்பட இடைக்கால தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கால்வாயில் வீழ்ந்து மாணவன் மரணம்!

கொழும்பு, மே 04

மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று மாணவர்கள் கால்வாயில் வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

குருநாகல் - [illegible] பின்புறமாக இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இரு மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் மூவர் நீதிமன்றத்தால் விடுதலை

யாழ்ப்பாணம், மே 04

**இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த மூன்று இந்திய மீனவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.**

யாழ். மேல் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தினால் மூவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த பெப்ரவரி மாதத்தின் இரு வேறு தினங்களில் கைது செய்யப்பட்டிருந்த இந்த மீனவர்கள் ஆறு மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த மூவரும் படகோட்டிகள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பில் இந்திய அரசாங்கத்தால் யாழ். மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்ட நிலையில், அவர்கள் விசைப் படகோட்டிகள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்பதால், நல்லிணக்க அடிப்படையில் 6 மாத சிறைத்தண்டனையை இரத்து செய்து யாழ். மேல் நீதிமன்றம் கடந்த வாரம் உத்தரவிட்டது.

இதற்கிணங்க, நேற்று மூன்று இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, யாழ். மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையும் வாசிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மூவரையும் விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

(ஐ)

# கடல் அலைகளின் தாக்கம் அதிகரிக்கும்!

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
DEPARTMENT OF METEOROLOGY
ශ්‍රී ලංකාව இலங்கை SRI LANKA

கொழும்பு, மே 04

கடல் அலைகளின் தாக்கம் அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த அறிவிப்பு, கற்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளுக்கு பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அந்த கடற்பகுதிகளில் 2.5 முதல் 3.0 மீற்றர் வரையில் அலை உயரவும், 12-16 வினாடிகள் அலைகள் அடிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடற்கரைகளுக்கு அப்பால் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் செயல்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

(ஐ)

# ஊடக சுதந்திர தினத்தில் யாழில் நேற்று போராட்டம்



யாழ்ப்பாணம், மே 04

சர்வதேச ஊடக சுதந்திர தினமான நேற்று யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் அமையம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஊடகவியலாளர்களில் ஒரு பகுதியினர் பங்கேற்று படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரினர்.

அத்துடன், ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும், அரச அதிகாரிகள், அரச பலங்களை பிரயோகித்து ஊடகவியலாளர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி, அச்சுறுத்துவது உள்ளிட்ட செயபாடுகளை நிறுத்த வேண்டும் எனவும், ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

(ஐ)

# உலகில் தமிழ் மொழிக்கு அகராதி கொடுத்த இடம் யாழ்ப்பாணம்!

## உலக சிலம்பம் சங்கத் தலைவர்




யாழ்ப்பாணம், மே 04

உலகில் தமிழ் மொழிக்கு அகராதியை கொடுத்த இடம் யாழ்ப்பாணம் என்பதில் தான் பெருமை அடைகிறார் என்று உலக சிலம்பம் சங்கத்தின் தலைவர் முனைவர் சுதாகரன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சர்வதேச சிலம்ப போட்டியை முதல்முறையாக 5 நாடுகளின் பங்குபற்றலுடன் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளமையிட்டு பெருமை அடைகிறேன்.

யாழ்ப்பாணம் தமிழுக்கு அகராதி கொடுத்த இடம். இங்கு பேசுகின்ற தமிழ், தூய்மையான - செழுமையான மொழி. அதையிட்டு நான் பெருமை அடைகிறேன்.

அவ்வாறான ஓரிடத்தில் உலக சிலம்பம் சங்கத்தின் உறுப்பினர்களும் வெளிநாட்டு மாணவர்களும் இணைந்து எமது பாரம்பரிய கலைப் போட்டியை நிகழ்த்தவுள்ளோம்.

இலங்கை சிலம்ப சங்கத்துடன் இணைந்து உலக சிலம்ப சங்கம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் சனிக்கிழமை காலை 8 மணிக்கு (இன்று) நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சர்வதேச தரச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது - என்றார்.

(ஐ)

# காலி துறைமுக அபிவிருத்திக்கு 20 கோடி டொலர்கள் ஒதுக்கீடு!

கொழும்பு, மே 04

காலி துறைமுகம் 200 மில்லியன் அமெரிக்க டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 5 ஆயிரத்து 900 கோடி ரூபாய் செலவில் சுற்றுலா துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

காலி துறைமுகத்தை சுற்றுலா துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான அனைத்துத் திட்டங்களையும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சு தயாரித்துள்ளது.

இந்தத் திட்டத்தில் 850 மீற்றர் மற்றும் 150 மீற்றர் நீளம் கொண்ட இரண்டு பிரேக்வோட்டர்கள், துறைமுக தளத்தை 12.05 மீற்றர் ஆழப்படுத்துதல், பயணிகள் முனையம் அமைத்தல் போன்றவை அடங்கும்.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு பிரச்னைகளை தீர்ப்பதற்கான விசேட கலந்துரையாடல் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா மற்றும் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோர் இதில் இணைந்து கொண்டதுடன், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை ஒரு வாரத்துக்குள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்த அபிவிருத்தி திட்டத்துக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# வீசா வழங்கல் இந்தியாவிடம் எதிர்த்து நேற்றுப் போராட்டம்!



கொழும்பு, மே 04

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு வீசா விநியோகிக்கும் பொறுப்பை இந்தியாவுக்கு வழங்க வேண்டாம் என்று வலியுறுத்தி நேற்று வெள்ளிக்கிழமை போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தை இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான அமைப்பினர் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்பாக முன்னெடுத்தனர்.

கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வீசா வழங்கும் பொறுப்பை இந்திய தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குடிவரவு - குடியகல்வு திணைக்களம் வழங்கியது இதற்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(ஐ)

# கொத்து, ப்ரைட் றைஸ் 20 ரூபாயால் குறையும்!

கொழும்பு, மே 04

எரிவாயு விலை குறைக்கப்பட்டதை அடுத்து உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளது என்று அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொத்து ரொட்டி, ப்ரைட் றைஸ் விலை 20 ரூபாயால் குறைக்கப்படும். அத்துடன், சிற்றுண்டிகளின் விலையும் 10 ரூபாயால் குறைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், தேநீர் மற்றும் பால் தேநீர் ஆகியவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை எனவும் சங்கம் குறிப்பிட்டது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் நலன் சார்ந்துள்ள விடயங்களுக்காக ஒன்றுபடுவோம்

## மேதினக் கூட்டத்தில் அறைகூவல்

நிந்தவூர், மே. 04

"நாம் பெற்றுக்கொண்ட இருந்த உரிமைகள் கூட பறிக்கப்பட்ட அவல நிலையில் தமிழ் சமூகம் இன்று அல்லலுற்று, நிலை குலைந்து நிற்கின்றது. இதற்கான விடிவைப்பெறவும், மக்கள் நலன் சார்ந்த விடயங்களை வென்றெடுக்கவும் நாம் ஒன்றுபட்டு செயல்படவேண்டும்."

-இவ்வாறு, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் (பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி) தேசிய அமைப்பாளர் தோழர், சிவராசா மோகன் கூறினார்.



தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாண்டிருப்பிலுள்ள தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மாவட்ட பணிமனை மண்டபத்தில் இந்த மேதினக் கூட்டம் நடைபெற்றது.

கட்சியின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்த்தர் தோழர் சசி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான தோழர் அலெக்ஸ் (ஜேர்மன்), தோழர் சேகரன் (கனடா), தோழர் சலீம் (பிர்தௌஸ்) ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

"அரசே! இலங்கை பல இன மொழி, பலகலாச்சார மக்களின் நாடு என்பதை உறுதி செய்" எனும் பிரதான கோஷத்துடன் இடம்பெற் இந்த மேதினக் கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளடங்கிய மே தினப் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

தேசிய அமைப்பாளர் சிவராஜா மோகன் தொடர்ந்து உரையாற்றுகையில்-

தமிழ் மக்கள் இன்று பல்வேறு பேரினவாத அடக்கு முறைகள், அநீதிகளுக்கு முகம் கொடுத்துப் போராட வேண்டிய நிலமைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

ஏக பிரதிநிதித்துவம் என்ற துர்ப்பாக்கிய செயல்பாடு நம்மை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கின்றது.

எனவே இழந்து வரும் நம் உரிமைகளுக்காகவும், பெற வேண்டிய உரிமைகளுக்காகவும் நாம் ஓரணியில் திரண்டு போராடுவதன் மூலமே வெற்றிகளை ஈட்டமுடியும்.

நாம் விழிப்புடன் செயல்பட்டு, நம் சமூக பாதுகாப்பு விடயங்கள் எதிர்ககாலத்திலும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

குறிப்பாக தமிழர் பாரம்பரிய நிலங்கள், தொல்பொருள் தலங்கள் திட்டமிட்டவளகயில் கையகப்படுத்தப்பட்டும், ஆக்கிரமிக்கப்பட்டும் வருகின்றன.


பௌத்தர்களே இல்லாத இடங்களில் கூடபௌத்த விகாரைகளை அமைக்கவும், திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்யவும் சிங்கள பேரினவாதம் முனைப்புக்காட்டி வருகின்றது.

எனவே, இத்தகைய அநீதிகள், அடக்கு முறைகளை முறியடிக்கவும், தமிழர் சமூகம் தலை நிமிர்ந்து வாழவும் எம்மிடையே ஒற்றுமை அவசியமாகும்.

தேசிய பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் மக்களைக் கூறு போட முனையக் கூடாது.

தமிழ் மக்களின் நலன் சார்ந்து செயற்பட அனைவரும் ஒன்றுபட வேண்டும். இதற்கு எமது தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என்றும் தயாராகவேயுள்ளது- என்றார். (அ)

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்பு!





அம்பாறை, மே. 04

காத்தான்குடி நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள 18 கிராம சேவகர் பிரிவுகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்பு தொடர்பான விசேட கூட்டம் நேற்று முன் தினம் காத்தான்குடி நகரசபையின் முன்னாள் தவிசாளர் அஸ்வர் தலைமையில் காத்தான்குடியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் றவூப் ஹக்கீம் கலந்து கொண்டார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அலிசாஹீர் மௌலானா, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தலைவரும், முன்னாள் அமைச்சருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண சபையின் அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அரசியல் அதிஉயர் பீட உறுப்பினரும், கல்குடா தொகுதி முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளருமான சட்டத்தரணி ஹபீப் றிபான், அரசியல் அதிஉயர் பீட உறுப்பினரும், முன்னாள் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான சட்டத்தரணி யூ.எல்.முபீன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எல். பரீட், அரசியல் அதிஉயர்பீட உறுப்பினரும், முன்னாள் ஏறாவூர் நகர சபை தவிசாளருமான எம்.எஸ். நளீம், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ. சமால்டீன், காத்தான்குடி நகரசபையின் முன்னாள் தவிசாளர் மர்சூக் அஹமது லெப்பை, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான அன்சார், மத்தீன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

# நூகர்வோர் அதிகார சபையினால் நிந்தவூரில் விழிப்புணர்வு நிகழ்வு



அம்பாறை, மே. 04

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி அதிகார சபையில் பயிற்சி நெறியை மேற்கொள்ளும் பயிலுநர்களுக்கு நூகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி எஸ்.அப்துல் நாஸர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது, பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்கவேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்கக் கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் முறைப்பாடு செய்வது சம்பந்தமாக பயிலுநர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இவ் விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட்.எம். ஸாஜீத் மற்றும் என்.எம். நூஸ்கி ஆகியோருடன் தொழிற்பயிற்சி நிலையத்தில் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர். (அ)

# மாகாண பிரதி ஆணையாளர் கடமையை பொறுப்பேற்றுக்கொண்ட வைத்தியர் நபீல்!

திருமலை, மே. 04

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண பிரதி ஆணையாளராக நியமனம் பெற்ற கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத மருத்துவ அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபில் தனது கடமையை திருகோணமலை சுதேச மருத்துவ திணைக்களத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.



கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண பிரதி ஆணையாளர் வெற்றிடத்திற்கான இடைவெளியை பூர்த்தி செய்யும் நோக்கில், கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் தரம் ஒன்றைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நேர்முகத் தேர்வை கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலகத்தினால் நடத்தப்பட்டது.

இத்தேர்வில் அதிக புள்ளிகளைப்பெற்ற

கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத மருத்துவ அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபில் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கினார். இந்நிலையில் அவர் தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ், நிந்தவூர் தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.பி.அப்துல் வாஜித், சுதேச மருத்துவ திணைக்களத் திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரிகளான வைத்தியர் எஸ்.சிவச்செல்வன், வைத்தியர் எஸ்.சதீஸ், வைத்தியர் என்.வர்மேந்திரன் உள்ளிட்ட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவுத் தலைவர்களான வைத்தியர்கள் எம்.எச்.எம்.சரூக், எம்.எம்.நௌஷாட், ஐ.எல். ஜலால்டீன், ஏ.எல்.அப்துல் கபூர், ஐ.எம்.முஜீப், சுதேச திணைக்கள உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவெறி பிடித்த இந்தியர்கள்

## கடுமையாக சாடிய அமெரிக்க ஜனாதிபதி



நியூயோர்க், மே 04

**இந்தியர்கள் இன வெறி கொண்டவர்கள். இதனால் பொருளாதாரத்தில் தடுமாறுகிறார்கள்.- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சர்ச்சைக் கருத்தை வெளியிட்டுள்ளார். சீனா மற்றும் இந்தியாவில் அந்நிய வெறுப்பு அதிகமாகி விட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது முறையாகப் போட்டியிடுகிறார் ஜோ பைடன். இதற்காகத் தீவிரமாக ஆதரவு திரட்டி வருகிறார். வாஷிங்டனில் நடந்த நிதி திரட்டும் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய பைடன், சீனா ஏன் பொருளாதாரத்தில் மோசமடைந்துள்ளது. ஜப்பானும், ரஷ்யாவும், இந்தியாவும் ஏன் பொருளாதாரத்தில் தடுமாறுகிறார்கள்?. ஏனென்றால் அவர்கள் இனவெறி கொண்டவர்கள். அவர்களிடம் அந்நிய வெறுப்பு அதிகமாகியுள்ளது.

மேலும், அவர்கள் புலம்பெயர்ந்தவர்களை விரும்புவதில்லை. ஆனால், அமெரிக்காவை புலம்பெயர்ந்தோர்தான் வலிமையாக்குகிறார்கள். புலம்பெயர்ந்தவர்களை அமெரிக்கா வரவேற்கிறது. அமெரிக்கப் பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கு காரணமானவர்களாக புலம்பெயர்ந்தோர் உள்ளனர். ஆனால், சீனா, ஜப்பான், ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலுள்ள அந்நிய வெறுப்பு அவர்களின் பொருளாதாரத்தைப் பாதிக்கிறது.- என்றார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் புலம்பெயர்ந்தோர் விவகாரம் முக்கிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது. ஜோ பைடனை எதிர்த்துப் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புலம்பெயர்வு கொள்கைகளை விமர்சித்து வரும் நிலையில் ஜோ பைடன் புலம்பெயர்ந்தோர்களை ஆதரித்து பேசிவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# நெடுஞ்சாலை தாழிறங்கி விபத்து 60 பேர் உயிரிழப்பு, 30 பேர் காயம்

பீஜிங், மே 04

தென்கிழக்கு சீனாவில் ஒரு மலைப்பாங்கான அதிவேக நெடுஞ்சாலை தாழிறங்கி பாரிய விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் சிக்கி இது வரை 60 பேர் பலியாகினர் என்றும் 30 பேர் படுகாயமடைந்தனர் என்றும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குவாங்டாங் மாகாணத்தில் ஒரு மாதம் தொடர்ந்து பெய்த கனமழைக்கு பின்னர் இந்த அதிவேக நெடுஞ்சாலை தாழிறங்கி வாகனங்கள் பள்ளத்தாக்கில் வீழ்ந்து தீப்பிடித்தன.

தேடுதல் பணி தொடர்ந்து நடைபெறுவதோடு, உயிரிழந்தவர்களில் வெளிநாட்டுப் பிரஜைகள் எவரும் கண்டறியப்படவில்லை எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர். (எ)



# அமெரிக்கா - இங்கிலாந்து மீது ஈரான் பொருளாதார தடை!



காஸா, மே 04

ஹமாஸுக்கு எதிரான போரை தீவிரப்படுத்தியுள்ள இஸ்ரேலுக்கு ஆதரவான அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது ஈரான் கடும் கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதாரத் தடையை விதித்துள்ளது.

இராணுவ அதிகாரிகள் உட்பட ஏழு அமெரிக்கர்கள், இங்கிலாந்து அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களைக் குறிவைத்து இந்தத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதில், ஈரான் நிதி மற்றும் வங்கி அமைப்புக்களில் கணக்குகள் மற்றும் பரிவர்த்தனைகளைத் தடுப்பது, ஈரான் இஸ்லாமியக் குடியரசின் அதிகார வரம்புக்குள் உள்ள சொத்துகளை முடக்குவது, அத்துடன் வீசா வழங்குதல் மற்றும் ஈரானிய எல்லைக்குள் நுழைவதைத் தடுப்பது ஆகியவை அடங்கும் என்றும் ஈரான் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பல்கலைக்குள் நுழைந்த பொலிஸார் மாணவர்களை வெளியேற்ற முயற்சி

## கலிபோர்னியாவில் பெரும் பதற்றம்


கலிபோர்னியா, மே 04

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக வளாகத்துக்குள் கூடாரங்களை அமைத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பல்கலைக்கழக மாணவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் கடுமையாக எச்சரித்துள்ளனர். இதேவேளை, போராட்டக்காரர்களை நோக்கி பொலிஸார் முன்னேறி வருவதால் கலிபோர்னியாவில் பெரும் பதற்றம் நிலவி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சில பகுதிகளில் மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறுகின்றன.

எங்கள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறு என பொலிஸாரை நோக்கி மாணவர்கள் கோஷம் எழுப்பி வருகின்றனர்.

இதேவேளை, கலிபோர்னியா பல்கலைக்கழகத்துக்குள் நூற்றுக்கணக்கான பொலிஸார் நுழைந்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)




# ராகுல் காந்தியை பிரதமராக்க பாகிஸ்தானே விரும்புகின்றது

## பிரதமர் மோடி விமர்சனம்

குஜராத், மே 04

பாகிஸ்தான் தலைவர்கள் காங்கிரஸின் இளவரசரை இந்தியாவின் பிரதமராக்க விரும்புகின்றார்கள் என்று ராகுல் காந்தி குறித்து பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் அமைச்சர் சௌதரி ஃபவத் ஹுசைன், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியை பாராட்டி பேசிய நிலையில் குஜராத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் இந்தியப் பிரதமர் மோடி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் இந்தியாவில்



வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனால் பாகிஸ்தானியர்கள் அங்கே அழுகிறார்கள். காங்கிரஸின் இளவரசரை (ராகுல் காந்தி) இந்தியாவின் பிரதமராக்க பாகிஸ்தான் தலைவர்கள் விரும்புகின்றார்கள். காங்கிரஸ் பாகிஸ்தானை பின்பற்றுவதாக இருந்தது.

காங்கிரஸின் இளவரசர் அரசியல் சாசனத்தை தனது தலையில் வைத்துக்கொண்டு ஆடுகிறார். ஆனால் கடந்த 75 ஆண்டுகளில் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் அரசியல் சாசனம் ஒரே மாதிரி செயல்படுத்தப்படவில்லை. காஷ்மீருக்கு அரசியல் சாசனம் பொருந்தாது. அங்கு சட்டப் பிரிவு 370, சுவர் போல தடையாக இருந்தது. நாங்கள் அதனைத் தகர்த்தோம்.- என்றார். (எ)

# வரலாற்றை மறந்து உளறும் மோடி நீண்ட காலம் வாழ்க

## ப. சிதம்பரம் விமர்சனம்




டில்லி, மே 04

இடஒதுக்கீடு குறித்த வரலாற்றை மறந்துவிட்டு பேசுகிறார் பிரதமர் நரேந்திர மோடி என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் ப. சிதம்பரம் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் தொடர்ந்து தேர்தல் பிரசாரத்தில் உளறி வருகிறார். அவர் உயிருடன் இருக்கும் வரை, மத அடிப்படையில் யாருக்கும் இட ஒதுக்கீடு வழங்க அனுமதிக்கவிடமாட்டேன் என்கிறார். ஆனால் உண்மை என்னவெனில், காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் அத்தகைய அறிவிப்போ, வாக்குறுதியோ எதுவும் இல்லை. இந்தியா கூட்டணியின் வேறு எந்த கட்சியும் அத்தகைய வாக்குறுதி கொடுக்கவில்லை. எனவே, மோடி நீண்ட காலம் வாழட்டும்.

பா. ஜ. கவிடம் இதேபோன்ற கோரிக்கையை முன்வைத்தால், காலாவதியான காசோலை போல், 2004 முதல் இருக்கும் அக்கட்சியின் காலாவதி வாக்குறுதிகளின் பட்டியலில் தான் அந்த கோரிக்கைகளும் இருக்கும்" - என்று சிதம்பரம் விமர்சித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. எம். எவ். திட்டங்களின் கீழ் இலங்கை சிறந்த முன்னேற்றம்!

புதுடில்லி, மே 04

**சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களின் கீழ் இலங்கை சிறந்த முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்கள பணிப்பாளர் கிருஷ்ணன் சிறீநிவாசன் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாணய நிதியத்தின் கண்காணிப்பின் படி, இலங்கையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் இதுவரையில் சாதகமான பலன்களை வழங்கியுள்ளன.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# சகல பாடசாலைகளும் 20ஆம் திகதி ஆரம்பம்!

கொழும்பு, மே 03

நாட்டின் அனைத்து பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகளும் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் நேற்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்தது.

இதேவேளை, பாடசாலைகளின் மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி பொது தராதர சாதாரண தரப்பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் நான் இணையவில்லை!

## அர்ஜூன ரணதுங்க



கொழும்பு, மே 04

நான் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தேன் என்று வெளியான செய்திகளில் உண்மையில்லை என்று முன்னாள் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மே தின கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க பங்கேற்றிருந்தார்.

"பழனி திகாம்பரம் எம்.பியின் அழைப்பின் பேரில் பேரணியில் நான் பங்கேற்றேன். அதது ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்ததாக அர்த்தப்படாது", என்றும் அவர் கூறினார். (ஐ)

# வீட்டுப் பாவனைக்கான வாடகையை கெஹலியவின் ஊதியத்தில் அறவிடுக!

## மத்திய மாகாண சபை கடிதம்

கொழும்பு, மே 04

கண்டியில் கெஹலிய ரம்புக்வெலவின் பாவனையிலுள்ள வீட்டின் வாடகை பணத்தை அவரின் சம்பளத்தில் இருந்து அறவிடுமாறு மத்திய மாகாண சபை கடிதம் அனுப்பியுள்ளது.

போராட்ட (அறகலய) காலத்தில் கண்டியிலுள்ள கெஹலியவின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. இதனால், அவர் வசிப்பதற்காக மத்திய மாகாண முதலமைச்சரின் இல்லம் வழங்கப்பட்டது.

கெஹலியவின் தனிப்பட்ட பாவனையில் இருந்த வீட்டுக்கு மார்ச் மாதத்துக்கான வாடகை செலுத்தப்படவில்லை. இதனை கெஹலியவின் சம்பளத்தில் இருந்து பெறுமாறு மத்திய மாகாண முதலமைச்சு பாராளுமன்ற செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இது தொடர்பான கடிதம் ஏப்ரல் முதலாம் திகதி அனுப்பி வைக்கப்பட்டதாகவும் இது வரை எந்த பதிலும் வரவில்லை எனவும் மத்திய மாகாண சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராகக் கடமையாற்றிய காலத்தில் இந்த வீட்டை பயன்படுத்த தனது சம்பளத்தில் 20 வீதத்தை மாகாண சபை கணக்கில் வரவு வைத்துள்ளார் என்றும் சுற்றாடல் அமைச்சராக இருந்த காலத்தில் உரிய தொகையை மத்திய மாகாண சபை உரிய முறையில் பெற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாக ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

தற்போது பாராளுமன்ற உறுப்பினராக நீடிக்கும் ரம்புக்வெல அவரின் தனிப்பட்ட ஊழியர்களின் பாவனைக்காக அந்த வீட்டைப் பயன்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அதிகாரம் மக்கள் கரங்களில் இருப்பதை உறுதிப்படுத்துவோர் பத்திரிகையாளர்கள்!

## அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, மே 04

ஊழலை வெளிப்படுத்துவதன் மூலமும் வெளிப்படைத் தன்மைக்காக குரல் கொடுப்பதன் மூலம் அதிகாரம் மக்களின் கரங்களிலேயே இருப்பதை உறுதி செய்பவர்கள் பத்திரிகையாளர்கள் என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு தனது எக்ஸ் தளத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உண்மையை துணிச்சலுடன் பின்பற்றும் உலகெங்கிலும் உள்ள மற்றும் இலங்கையை சேர்ந்த பத்திரிகையாளர்களிற்கு நாங்கள் என்றும் ஆதரவாக இருக்கின்றோம்.

ஆரோக்கியமான ஜனநாயகத்தை பேணுவதிலும் பொது மக்களுக்கு விடயங்களை தெரியப்படுத்துவதிலும் பத்திரிகையாளர்கள் இன்றியமையாத பங்கை வகிக்கின்றனர்.

அவர்கள் பொது நிறுவனங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வணிகங்களை கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஊழலை வெளிப்படுத்துவதன் மூலமும் வெளிப்படைதன்மைக்காக குரல் கொடுப்பதன் மூலம் விமர்சனத்துடனான ஆய்வுகளை முன்வைப்பதன் மூலம் பத்திரிகையாளர்கள் அதிகாரம் மக்கள் நீடித்திருப்பதை உறுதி செய்கின்றனர். (ஐ)

# 2 கிலோ கொக்கைனுடன் பம்பலப்பிட்டியில் ஒருவர் கைது!

கொழும்பு, மே 04

5 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்களுடன் சந்தேக நபரொருவர் கொழும்பு - பம்பலப்பிட்டி - பாமன்கடை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 2 கிலோ கொக்கைன், ஹஷ் மற்றும் குஷ் ரக போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# ஏப்ரலில் பணவீக்கம் 1.5 பணவீக்கம் உயர்வு

கொழும்பு, மே 04

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த மார்ச் மாதத்தில் 0.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், ஏப்ரல் மாதம் 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதன்படி கடந்த மார்ச் மாதத்தில் 3.8 சதவீதமாகப் பதிவான உணவுப்பணவீக்கம் ஏப்ரலில் 2.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அத்துடன், மார்ச்சில் 0.5 சதவீதம் எனும் குறிப்பிடத்தக்களவிலான சுருக்கத்தைப் பதிவுசெய்த உணவு அல்லாத பண்டங்களின் பணவீக்கம் ஏப்ரலில் 0.9 சதவீதமாக அதிகரித்தது.

மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணின் மாதாந்த மாற்றம் ஏப்ரலில் -0.79 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட 0.32 சதவீத வீழ்ச்சியும், உணவல்லாப்பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட 0.47 சதவீத வீழ்ச்சியும் காரணமாக அமைந்துள்ளன.

இதேவேளை பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் கடந்த மார்ச் மாதத்தில் பதிவான 3.1 சதவீதத்திலிருந்து ஏப்ரலில் 3.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பண வீக்கம் என்பது சந்தையிலுள்ள பொருட்களின் பொதுவான விலை உயர்வால் அந்த நாட்டின் நாணயத்தின் பொருட்களை வாங்கும் திறன் (அல்லது சந்தை மதிப்பு) உள்நாட்டு சந்தையில் [illegible] குறிக்கும். (ஐ)

# ஓ. எல். மாணவர்களுக்காக இன்று ஆட்பதிவு திணைக்களம் திறக்கும்

கொழும்பு, மே 04

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக இன்று சனிக்கிழமையும் ஆட்பதிவு திணைக்களம் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்பதிவு திணைக்களத்தின் பிரதான பணிமனை, வவுனியா, மட்டக்களப்பு, காலி, குருநாகல் நுவரெலியா மாவட்டங்களின் பணிமனைகள் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை திறந்திருக்கும்.

இதுவரை தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்கள், முதன்மை அல்லது கிராம அலுவலரால் சான்றளிக்கப்பட்ட முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கொண்டு வர வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஆட்கள் பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான றறற.னசி.பழஎ.டம இலிருந்து உரிய தகவல் உறுதிப்படுத்தல் கடிதத்தை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திட்டங்களை...

ஜோர்ஜியாவில் இடம்பெறும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சருக்கும், அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவிச் செயலாளருக்கும் இடையிலான சந்திப்பில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது, பொருளாதார மறுசீரமைப்புக்காக இலங்கை முன்னெடுத்துள்ள தீர்மானங்கள் மற்றும் செயல்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், பொருளாதார மீட்சிக்கு இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் 2024 - 2028 வரையான காலப்பகுதியில் கூட்டிணைவு மற்றும் மூலோபாய செயல்திட்டம் மற்றும் பொருளாதார மீட்சி உள்ளிட்ட காரணிகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.(எ)

### பொலிஸார்...

பல மணி நேரம் பதற்றம் நிலவியது.

சேர். ஜோன். கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் ஊடாக இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதாரம் என்பவற்றை விற்பதற்கு அரசாங்கம் சதி செய்வதாக குற்றஞ்சாட்டியே மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினரால் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு விஹாரமகாதேவி பூங்கா அருகில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ)

### ஊடக...

பட்டிருந்தாக எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டபோது பல பத்திரிகையாளர்களுக்கு எதிராக இடம்பெற்ற குற்றங்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படாத நிலையே காணப்படுவதாகவும் குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் இரண்டரை கோடி மக்கள் வசிக்கின்ற நிலையில் தற்போதும் ஊடக சுதந்திரம் கேள்விக்குறியாகவே உள்ளதாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கையில் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும் பல ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.

ஆனால் இவற்றுக்கு இன்றுவரை எந்தவொரு நீதியையும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் வழங்கவில்லை.

இந்த நிலையில், நாட்டிலுள்ள ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் இராணுவம் மற்றும் பொலிஸாரினால் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்படுவதாகவும் துன்புறுத்தப்படுவதாகவும் எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் ஆயிரத்து 668 ஊடகவியலாளர்கள் சர்வதேச ரீதியில் கொல்லப்பட்டுள்ளதாக எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது.

எமது நாட்டை பொறுத்தவரை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்திலேயே 44 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அதில் பெரும்பாலானோர் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் என்பதும் இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை என்பதும் கவலைக்குரிய விடயமாகும். (அ)

### சர்வதேசத்தின்...

நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

தான் சுயாதீன வேட்பாளராக களமிறங்க உத்தேசித்துள்ளதால் வெளியில் இருந்துகூட பலரும் ஆதரவு வழங்கலாம் என்ற கருத்தையும் தனக்கு நெருக்கமானவர்களிடம் ஜனாதிபதி முன்வைத்துள்ளார். (அ)

### சாதாரண...

திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாம் தடவையாக தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் நுழைவு அட்டைகளிலும் பல குறைபாடுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கணித பாட பரீட்சைக்கு மட்டும் தோற்றும் பரீட்சார்த்திகளின் நுழைவு அட்டைகளில் விஞ்ஞான பாடமும் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

### சு.கவின்...

திகதி அறிவித்திருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள் ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர் பில் சுதந்திரக் கட்சி இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித் தது அவரின் தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம்

எனவும் விஜயதாச சுட்டிக்காட்டியுள் ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடல் நடத்த விரைவில் சு.கவின் உயர்மட்டக் குழு கூட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

### ராஜபக்ஷக்கள்...

நாட்டில் இடம்பெறவுள்ள பிரதான தேர்தல்களில் பொதுஜன பெரமுனவுக்கும், ராஜபக்ஷக்களுக்கும் மக்கள் தகுந்த பாடத்தை கற்பிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மே தினக் கூட்டத்தில் எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவினரும், ராஜபக்ஷக்களும் குறிப்பிடுவது நகைப்புக்குரியது. 2022 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் மக்கள் போராட்டம் பலம் பெற்றதையும், ராஜபக்ஷக்கள் பதவிகளை விட்டு தப்பிச் சென்றதையும் மறந்து விட்டார்கள்.

பொருளாதாரப் படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட ராஜபக்ஷக்கள் முன்னிலைப்படுத்தியுள்ள சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அரசியல் எதிர்காலம் என்பதொன்று கிடையாது. இடம்பெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் ராஜபக்ஷக்களுக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் நாட்டு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. பொதுஜன பெரமுனவின் சார்பில் தேர்தலில் போட்டியிட எவருமில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்திக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் செல்வாக்கு பெறலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு ராஜபக்ஷக்கள் செயல்படுகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நாட்டு மக்களுக்கு நன்மதிப்பு உள்ளது. ராஜபக்ஷக்களுடன் கூட்டணியமைத்து மக்களின் வெறுப்பை ஜனாதிபதி பெற்றுக் கொள்ளக் கூடாது. ராஜபக்ஷக்களிடமிருந்து விலகிச் செயல்படுவது ஜனாதிபதியின் அரசியலுக்கு சிறந்ததாக அமையும். - என்றார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மைத்திரி மீள வாக்குமூலம்!

கொழும்பு, மே 04

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று குற்றப்புல னாய்வுத் திணைக் களத்தில் 2மணி நேரம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பிலேயே மைத்திரி வாக்குமூலம் வழங்கியுள்ளார். (எ)



# இலங்கையில் விளையாட்டுக்களை அரசியலற்றதாக்கும் ஒழுங்குமுறை

## அமுல்படுத்தினார் அமைச்சர் ஹரின்

கொழும்பு, மே 04

இலங்கையில் விளையாட்டுக்களை அரசியலற்றதாக்கும் வகையிலான ஒழுங்குமுறை ஒன்றை விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நேற்று அமுல்படுத்தினார்.

இந்த ஒழுங்குமுறையை உத்தியோக பூர்வமாக்கும் வகையில் அதற்கான ஆவணத்தில் அமைச்சர் கையெழுத்திட்டார்.

2024 ஒழுங்குமுறை இலக்கம் 1 என அடையாளப்படுத் தப்பட்ட ஆவணத்தையே அமைச்சர் கையெழுத்திட்டு அமுல்படுத்தினார்.

தேவை எழும்போது 73 வகையான விளையாட்டுத் துறை சங்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை விளையாட்டுத்துறை திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஷமல் பெர்னாண்டோவுக்கு அமைச்சர் இதன்மூலம் வழங்கியுள்ளார்.



அத்துடன் தேவைப்படும்போது அந்த சங்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பணிப்பாளர் நாயகத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல், விளையாட்டுத்துறை பங்குதாரர்களின் அனைத்துக் குறைகளையும் கேட்டறிந்து நாட்டின் விளையாட்டு நலன்களுக்காக அவர்களை வழிநடத்தும் வகையில் குறைகேள் அதிகாரி ஒருவரின் சேவையையும் ஹரின் பெர்னாண்டோ அறிமுகப்படுத்தினார். (எ)

# சிறீ லங்கன் ஏர்லைன்ஸ் விமானம் வியன்னாவில் திடீர் தரையிறக்கம்

கொழும்பு, மே 04

லண்டன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சிறீ லங்கன் ஏர்லைன்ஸ் விமானம் பயணியொருவருக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக சிகிச்சைக்காக ஆஸ்திரியாவின் வியன்னா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இந்தச் சம்பவம் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றுள்ளது.

272 பயணிகளுடன் பயணித்த இந்த விமானமானது, பயணியொருவருக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக சிகிச்சைக்காக ஆஸ்திரியாவின் வியன்னா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

பின்னர் மீண்டும் லண்டன் நோக்கிப் புறப்படவிருந்த இந்த விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வியன்னாவிலிருந்து புறப்படத் தாமதமாகியது.

இந்நிலையில், விமானம் புறப்படும் வரை ஐரோப்பாவுக்கான வீசாவை பெற்றிருந்த அனைத்துப் பயணிகளையும் வியன்னா நகரில் தங்க வைக்க வசதிகள் செய்யப்பட்டன. (எ)

### பல்கலை. நிர்வாக...

வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தி குறிப்பில்-

கல்வி அமைச்சர், திறைசேரி அதிகாரிகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து முயற்சிகள் மற்றும் கலந்துரை யாடல்கள் நடத்தப்பட்ட போதிலும், கோரிக்கைகள் நிறைவேற்றப் படாமல் உள்ளன.

ஜனவரி முதல் மார்ச் 2024 வரை நடத்தப்பட்ட அடையாள வேலை நிறுத் தங்களும் அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பரிசீலனையைப் பெறுவதில் தோல்வியடைந்தன. இதன் விளைவாக, தொழிற்சங்க நடவடிக்கை மூலம் ஒன்றியம் தனது எதிர்ப்பை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் உயர்கல்வி நிறுவனங்களின் அதிகாரிகள், மாணவர்கள், கல்விச் சமூகங்கள், பல்கலைக்கழக அமைப்பில் உள்ள பிற தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து எமது ஒன்றியம் ஆதரவையும் புரிதலையும் நாடுகிறது.

சுமுகமான பல்கலைக்கழக சூழலை வளர்ப்பதற்கு தொழிலாளர் உரிமைகள் பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஒற்றுமை முக்கியமானது. தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஏற்படும் அசௌகரியங்களுக்காக பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் ஒன்றியம் வருந்துகிறது - என்றுள்ளது. (அ)

### எரிவாயு...

ரூ. 275 ரூபாய் குறைக்கப் பட்டு புதிய விலை 3 ஆயிரத்து 840 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ எரிவாயுவின் விலை 110 ரூபாயால் குறைக்கப்பட்டு ஆயிரத்து 542 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


ஈழநாடு
Eelanadu

# பிரான்ஸ், ஐரோப்பிய ஒன்றிய உதவிகள் தமிழருக்கு கிடைப்பதை உறுதி செய்க!

## தூதுவரிடம் கோரினார் மனோ கணேசன்

கொழும்பு, மே. 04

**இலங்கைக்கு பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவிகள் இலங்கையின் தமிழ் மக்களுக்கும், பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் பிரான்ஸ் தூதுவரை கேட்டுக் கொண்டார்.**



மனோ கணேசனுக்கும், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜோன் பிரான்கொயிஸ் பெசட்டுக்கும் இடையில் சந்திப்பு கொழும்பில் உள்ள பிரான்ஸ் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, பிரான்ஸ் தூதுவருடன், தூதரக துணை தலைமை அதிகாரி திருமதி மாரி நொயெல்லா தூரிசும் உடன் இருந்தார்.

இந்த சந்திப்பு தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில், மனோ கணேசன் தெரிவிக்கையில் -

பிரான்ஸ் தூதுவர் ஜோன் பிரான்கொயிஸ் இல்லத்தில் பிரான்ஸ் விருந்தோம்பல் ஆசாரத்துடன் கூடிய பயனுள்ள சந்திப்பு நிகழ்ந்தது. தெற்கு உலக நாடுகள் தொடர்பில் பங்களிப்புகளை வழங்க பிரான்ஸ் இன்று உறுதியாக இருப்பது என்னைக் கவருகிறது.

ஜனாதிபதிகள் மக்ரோன் - விக்கிரமசிங்க ஆகியோர் மத்தியிலான பேச்சுவார்த்தைகளின் பின் இலங்கைக்கு சமுத்திரத்துறை தொடர்பில் உதவ பிரான்ஸ் ஆர்வம் கொண்டு உள்ளதாக தூதுவர் மற்றும் தூதரக துணை தலைமை அதிகாரி ஆகியோர் என்னிடம் கூறினர். பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவிகள் இலங் கையில் தமிழ் மக்களுக்கும், பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைப்பதை உறுதிபடுத்துமாறு நான் கோரினேன். நமது மக்கள் தொடர்பில் விசேட வேலைத் திட்டங்களை முன் மொழிந்து முன்னெடுப்பது தொடர்பில் தொடர்ந்து பேச்சுகள் நடத்துவது பற்றியும் கலந்துரையாடினோம். - என்றார்.

# கொள்கலன் ஏற்றுமதி, இறக்குமதி செயல்பாடுகள் 48 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, மே. 04

செங்கடலைச் சுற்றியுள்ள மத்திய வளைகுடா வலய போர்ச் சூழல் காரணமாக கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் கொள்கலன்கள் கையாளுதல் (ஏற்றி இறக்கும்) செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாகவும் கடந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது அது 48 வீத அதிகரிப்பு என்றும் துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் பிரதான கொள்கலன் செயற்பாட்டாளர்களான துறைமுக அதிகார சபை கடந்த வருடத்தின் முதல் காலாண்டில் 4,41,032 கொள்கலன்களை ஏற்றி இறக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இந்த வருடத்தில் அது 6,52,766 ஆக அதிகரித்துள்ளது. இது 48 வீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் துறைமுக அதிகார சபை இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 5,82,483 கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்துள்ளதாகவும், கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதத்துடன் ஒப்பிடுகையில் இது,49.81 வீதமான அதிகரிப்பு என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவாரா குமார்?

கொழும்பு, மே. 04

ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலை சோஷலிசக் கட்சியும் களமிறங்கும் என்று அந்தக் கட்சியின் செயலாளர் குமார் குணரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என அடுத்து வரும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் எமது கட்சி களமிறங்கும். நிறைவேற்று ஜனாதிபதி ஜனாதிபதி முறைமை ஜனநாயக முறைமைக்கு அச்சுறுத்தல் எனக் கருதுகின்றோம். எனவே, அம்முறையை நீக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளோம். எனினும், அரசியல் வாய்ப்பை, அரசியல் தலையீட்டைக் கருத்திற்கொண்டு தேர்தலில் போட்டியிடுவோம்.


இடதுசாரி சக்திகளுடன் பொது வேலைத்திட்டத்துடன் களமிறங்குவோம். வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை - என்றார். (அ)

# மோசமான ஆட்சிக்கு முடிவுகட்டி மக்கள் சார் அரசை நிறுவுவோம்!

## நோர்வே தூதுவரிடம் கூறினார் சஜித்

கொழும்பு, மே. 04

தற்போதைய படுமோசமான ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்படும். மக்கள் சார் அரசு ஸ்தாபிக்கப்படும் என்று தன்னை சந்தித்த நோர்வே தூதுவரிடம் கூறினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.



இலங்கைக்கான நோர்வே தூதுவர் திருமதி மே எலின் ஸ்டெனருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் நேற்று முன் தினம் விசேட சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ஜோன் பிஜேர்கெமும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் இரு தரப்பினரும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி குறித்தும் அதிலிருந்து மீள்வது குறித்தும் நோர்வேத் தூதுவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரியப்படுத்தியதுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் திட்டங்கள் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

இந்த ஆண்டு இந்நாட்டின் அரசியலில் ஒரு முக்கியமான ஆண்டு என்றும், முக்கியமான தேர்தல் நடைபெறும் என்றும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டை மீண்டும் வழமை நிலைமைக்குக் கொண்டு வர ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு திட்டமிட்டுள்ளது என்பது குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் விளக்கமளித்தார்.

இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் நாடாளு மன்ற உறுப்பினர்களான நிரோஷன் பெரேரா, எரான் விக்கிரமரத்ன மற்றும் காவிந்த ஜயவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அச்சுவேலியில் இரு வீடுகள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!

## மூவர் பொலிஸாரினால் கைது

யாழ்ப்பாணம், மே. 04

அச்சுவேலிப் பகுதியில் இரண்டு வீடுகள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் சகோதரர்கள் உள்ளிட்ட மூவர் அச்சுவேலி பொலிஸாரி னால் கைது செய்யபப்பட்டுள்ளனர்.



அச்சுவேலி-சங்கானை வீதியில் தென் மூலைப் பகுதியில் உள்ள இரு வீடுகள் மீது நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் சகோதரர்கள் உள்ளிட்ட மூவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# மட்டக்களப்பு வைத்தியசாலையில் விரைவில் சத்திர சிகிச்சை பிரிவு!

மட்டக்களப்பு, மே. 04

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இந்திய அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் சத்திர சிகிச்சைப் பிரிவு விரைவில் திறக்கப்படும் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி க.கலாரஞ்சனி தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா விஜயம் மேற்கொண்டிருந்த போதே வைத்தியசாலைப் பணிப்பாளர் இவ்வாறு கூறினார்.

இதன்போது இந்திய அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் சத்திர சிகிச்சை பிரிவுத் தொகுதியை இந்திய தூதுவர் பார்வையிட்டார்.

இலங்கை-இந்திய உறவுத் திட்டத்தின் கீழ் சுமார் 280 மில்லியன் ரூபாய் செலவில் இந்த சத்திரசிகிச்சை பிரிவு தொகுதி சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது சத்திர சிகிச்சைப் பிரிவு தொகுதியை பார்வையிட்ட தூதுவர் வைத்தியசாலை நிர்வாகத்துடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.



இச்சந்திப்பின்போது சத்திர சிகிச்சைப் பிரிவு தொகுதி நிர்மாணிப்பின் நிலைமை தொடர்பில் கேட்டறிந்துகொண்ட தூதுவர், அங்கு தேவையாகவுள்ள மேலதிக தேவைப்பாடுகள் குறித்தும் அறிந்துகொண்டார்.

இச்சந்திப்பில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி க.கலாரஞ்சனி,பிரதிப் பணிப்பாளர்,சிரேஷ்ட சித்தர சிகிச்சை நிபுணர் ஜீப்ரா, சிரேஸ்ட பொது வைத்திய நிபுணர் மதனழகன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 04.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org